# சிறுவர் அமுதம்

19.05.95

கிண்ணம் 6 எண்ணம் 1





*சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை*

*Kinder freundliches Magazin*

ஒன்றே மெய்ப் பொருளாகும்
அதன் வடிவம் ஒருங்காலை
என் தேவன் உன் தேவன் என்றுலகர்
பகைப்பதெல்லாம் இழிவாம்

-பாரதியார்-



அன்புச் சிறுவர் சிறுமியரே,

புத்தாண்டு விழாக்கள், கொண்டாட்டங்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன, நடந்து முடிந்து விட்டன. விழாக்களும் கொண்டாட்டங்களும் உங்களை மகிழ்ச்சிக் கடலிலே நீந்த வைத்திருக்கும். எங்களது நாட்டில் இதை விடச் சிறப்பாக, பெரியவர்களாகிய நாங்கள் சிறியவர்களாக இருந்த போது விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கின்றோம்.

இன்று நாட்டில் உண்டான இனக்கலவரத்தால், யுத்தத்தால் இப்படிப்பட்ட விழாக்கள் சிறப்பாக அமைவதில்லை. அனாதைகளாக்கப் பட்ட சிறுவர்களும், ஏழ்மைப் படுத்தப்பட்ட சிறுவர்களும் இவற்றை உணராமலே அல்லலுற்று வாழ்கிறார்கள். இந்நிலையில் வேறு நாடாக இருந்தாலும் இங்கு விழாக்களையும் கொண்டாட்டங்களையும் கண்டு ரசிக்கும் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்தான். விழாக்களில் பேச்சு, நடனம், பாட்டு, இவ்வாறு வெவ்வேறு கலை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டிருப்பீர்கள். பரிசுகளும் பெற்றிருப்பீர்கள். முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் எல்லோருக்கும் கிடைத்து விடாது. அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும். மற்றவர்களுக்குக் கூடுதலாக ஆறுதல்

பரிசுகள்தான். முதல் மூன்றையும் விட மற்றவை குறைந்தவையல்ல. சபையோர் மதிப்பீட்டில் நீங்கள் முதன்மை பெற்றவர்களாக இருக்கலாம் அல்லவா? ஆறுதல் பரிசாக இருந்தாலும் பெருமையுடன் ஏற்றுக் கொள்ளுங்கள்.

இதோடு இன்னொன்றையும் கடமையாகக் கொள்ள வேண்டும்.உங்களது பேச்சுக்களையோ பாடல்களையோ உங்கள் பெற்றோர்கள், சபையில் உள்ளவர்கள் உன்னிப்பாகக் கேட்க வேண்டும். நீங்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சி முடிவடைந்து விட்டது என்பதால் ஓடியாடி விளையாடிச் சத்தம் போடக் கூடாது. நீங்கள் மட்டும் அமைதியாக இருப்பது மட்டுமின்றி பெற்றோர்களையும் சத்தம் போடாமல் வைத்திருக்க வேண்டும். இதை உங்கள் கடமையாகக் கொள்ளுங்கள்.

உங்கள் கடமைகளைப் பற்றிக் கூறுகின்ற வேளையில் நாங்களும் உங்களிடம்மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டியநிலையில் இருக்கிறோம்.சென்ற பங்குனி, சித்திரைச் சஞ்சிகைகளில் கூடுதலான எழுத்துப் பிழைகள் ஏற்பட்டு விட்டன. கவனித்துத் திருத்த முடியாதநிலை ஏற்பட்டு விட்டது. பெரியவர்களாக இருந்தாலும் தவறுகள் தவறுகள் தான். மன்னிப்புக் கேட்க வேண்டியது எங்கள் கடமை.மன்னிப்பீர்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.

—ஆசிரியை—

*'அமுதம் மாமா நினைவுப் போட்டி'யில் கலந்து கொண்ட சிறுவர் சிறுமியருக்கு சிறுவர் அமுதம் தனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறது. போட்டிகளுக்குத் தேர்வாளராக இருந்து ஒத்துழைத்த ஸ்ரீஜீவகன் அவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.*


**T.பரிசு**

## நான் கண்ட பெரியார்

சிறுவர் அமுதம் சஞ்சிகையின் தந்தை அமரர் சின்ன இராஜேஸ்வரன் அவர்கள் மறைந்து ஒரு ஆண்டு நிறைவு பெறப்போகிறது. அவர் செய்த இலக்கியப் பணியை நினைவு கூரும் முகமாகச் சிறுவர்களுக்கான போட்டியில் எதைப்பற்றியும், எவரைப்பற்றியும் எழுதி அனுப்பலாம் என்பதைக் கண்ணுற்றேன்.

சிறிது காலமானாலும் எங்களுடன் வாழ்ந்து தமிழ் மொழிக்காக, கலைப்பணிக்காக, இலக்கியத்திற்காக வாழ்ந்து அகாலமரணமடைந்தும், இன்றும் அழியாப் புகழுடன் எங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மாமனிதர். அமரர் சின்ன இராஜேஸ்வரனை நினைவு கூர்ந்து எழுதலாம் எனத் துணிவு பெற்றேன்.

நான் கண்ட பெரியார் என்ற தலைப்பில் நான் அமரர் சின்ன இராஜேஸ்வரன் அவர்களைத்தான் கண்டேன். எத்தனையோ தமிழ் வளர்த்த பெரியார்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். பாடப்புத்தகங்களிலும் படித்திருக்கிறோம். சமீப காலத்தில் வெளிநாட்டில் எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழியை சிறுவர்கள் மத்தியில் ஊக்குவித்துத்




தமிழ்மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர் சிறுவர் அமுதத்தின் தந்தை.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதி அன்று பாடினான். சந்தர்ப்பவசத்தால் நாம் விரும்பியோ, விரும்பாமலோ வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழவேண்டியநிலை ஏற்பட்டது. இங்கேயுள்ள நிலமை எங்களின் வருங்காலச் சந்ததியினரின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்பதை நினைப்பதற்குக் கூட முடியாத ஒரு இயந்திர வாழ்க்கையாக அமைந்த நேரத்தில் தமிழ்ச் சிறார்களின் வருங்காலத்தை எண்ணித் தமிழ்ச்சமுதாயம் அழிந்து போகாவண்ணம் தமிழைக் கற்பிக்க ஒரு உந்துகோலாக இராஜேஸ்வரன் முன்வந்தார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இரவுபகலாக அயராது பாடுபட்டார். பொதுப்பணியே தனது முதற்பணி என்று வாழ்ந்து காட்டியவர். காலத்திற்கேற்ற கல்வியும்,கருத்துக்களும் தேவையென்று வாதிட்டவர். அந்நியநாட்டில் அன்னைமொழியை வளர்த்திடச் சிந்தனை பல செய்து சிறுவர் வளர்ச்சியே நம் தாயக உயர்ச்சியென்று உணர்ந்து பணி செய்த தமிழ்மகன். வள்ளுவனாக, பாரதியாக எம்முடனே வாழ்ந்து தனது உயிரைக் காணிக்கையாக்கி தமிழை வளர்த்த பெரியார். தன்னலம் பாராது அயராது உழைத்துத் தாயகம் விட்டு வந்த தமிழ்ச்சிறுவர்களின் நிலையை எண்ணி "சிறுவர் அமுதம்" படைத்து அன்பு உள்ளங்களில் வாழ்கின்றவர்.

தரணியெங்கும் வாழ்கின்ற தமிழ்மக்கள் நாமும் உலகில் ஒரு இனம், எங்கள் மொழி தமிழ் என்று பல மேடைகளிலும் முழங்கியவர். தமிழ் எழுத்தால் சிறார்களின் நெஞ்சில் வற்றாத ஊற்றாய், உறுதுணையாய் நின்றவர். இனிய தமிழ்வளர்ச்சியே என் மூச்சு என்று வாழ்ந்துகாட்டித் தனது அன்பாலும், பண்பாலும் மனதில் நீங்காத இடம் பெற்றார். பிறருக்குச் சேவை செய்வதே பிறவி எடுத்ததன் பயன் என்று வாழ்ந்து காட்டியவரே நான் கண்ட பெரியாராகும்.

-முகுந்தன் மகேந்திரன்-

Berg. Gladbach



## *சாவு*

இந்த உலகத்தில் தோன்றுகின்ற உயிரினங்கள் எல்லாம் ஒரு நாள் இறந்து போகின்றன. ஆனால் மனிதன் இறந்தால் மட்டுமே இறப்பாகத் தெரிகிறது. மற்ற உயிரினங்களின் இறப்புக்கள் கவனிக்கப்படுவதில்லை. அதிலும் என்று மனித இனம் தோன்றியதோ அன்றிலிருந்து மனிதன் பிறந்துகொண்டும், இறந்துகொண்டுமிருக்கிறான். எவ்வளவு இருக்கும்? யாராலும் எண்ணமுடியாது. கோடானகோடி மனிதர்கள் பிறந்து, இறந்து போனார்கள். கணக்கே தெரியாது.

யார் யார் எப்படி இறந்தவர்கள் யாருக்குத் தெரியும்? ஒருவருக்கும் தெரியாது. பிறந்தார் இறந்தார் மக்கள் அவரை மறந்தார் இதுதான் சாவு! ஆனால் சில மனிதர்கள் மட்டும் அப்படி இல்லாமல் யார் என்று கூறக் கூடியதாக உள்ளது.
இரண்டாயிரம் வரடங்களிற்கு முன்பு பிறந்த வள்ளுவர் இன்று அனைவருடைய வாயிலும் வள்ளுவர், வள்ளுவர் என்று புகழப்பட்டவாறே இருக்கிறார். இளங்கோவடிகள் ஆயிரத்துத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார். ஆனால் இன்று ஆறாம்வகுப்புப் பிள்ளையின் வாயிலும் இளங்கோவடிகள் வருகின்றார். ஔவைப்பாட்டி என்றோ வாழ்ந்தார். ஆனால் இன்றும் எம்முன்

இருப்பது போல் அன்புடன் ஔவைப்பாட்டி என்று அழைத்துக் கொண்டிருக்கிறோம்.

இது எப்படி முடிகிறது. இவர்களும் என்றோ இறந்து போனவர்கள்தானே. காரணம் அவர்கள் செய்த பெரிய செயல்கள் அவர்களை உலகம் மறக்க விடாமல் வைத்திருக்கிறது. திருக்குறள் உள்ளவரை வள்ளுவரைமறக்க முடியாதது போல. இது சாவு அல்ல சாகாவரம் கண்ணில் மறைந்தாலும் நினைவில் தோன்றிக் கொண்டிருப்பார்கள். இவர்கள் இறந்தும் இறவாதவர்கள்.

சிறுவர் அமுதம் மாமாவும், தான் வாழ்ந்த காலத்திலே தன்னால் இயன்றளவு ஐரோப்பாவிலே, சிறுவர்களின் தாய்மொழி வளர்ச்சிக்காகச் சிறுவர் அமுதம் மூலம் பாடுபட்டிருக்கிறார். நல்ல கதைகளை எழுதி எங்களைப் படிக்கத் தூண்டியிருக்கிறார். அவர் பணி நிச்சயம் போற்றப்படும். ஆகையினால் அவரும் நெடுங்காலம் எங்கள் மனங்களில் வாழ்வார். சாகாவரம் பெற்று விளங்குவார்.

வாழ்க அவர் நாமம்.

-சுரேகா கமலநாதன்-


## நீ எங்கே சென்றாய் மாமா

3. பரிசு

மாமா மாமா சின்ன மாமா
நீ தான் எங்கள் அன்பு மாமா
கதைகள் தந்த அமுதம் மாமா
நீ எங்கே சென்றாய் மாமா

சிறுவர்கள் எமக்கு நல்ல
தமிழ்க் கதைப் பாட்டு அளித்த
சின்ன ராசா மாமா
நீ எங்கே சென்றாய் மாமா

உன்னைப் பிரிந்து நாங்கள்
வாடுகிறோம் உன்னைத் தேடுகிறோம்
ஆண்டு ஒன்று ஓடி விட்டது
உன்னைக் காணவில்லை மாமா
நீ எங்கே சென்றாய் மாமா.





சுஜீவ் சண்முகலிங்கம் Claustha

## சிறு துரும்பும் பல் குத்த உதவும்



சின்னத்தம்பி தனது தாயாருடன் ஒரு சிறிய கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவன் ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் தனது நண்பன் ராமுவைப் போல் வசதியாக வாழ ஆசைப்பட்டான். ஆனால் பாவம் அவனது தாய். கஷ்ட்டபபட்டு தினமும் கூலிவேலை செய்து தன் மகனை வளர்த்து வந்தாள். தன் மகன் நன்றாகப் படிக்கவேண்டும் என ஆசைப்பட்டதனால் அவன் எதைக்கேட்டாலும் வாங்கிக் கொடுத்து மிகவும் செல்லமாக வளர்த்து வந்தாள்.



ஒரு நாள் அவன் பாடசாலை செல்லும் போது பத்து ரூபா தாயிடம் வாங்கிச் சென்றான். பாடசாலை இடைவேளையின் போது கடையில் ஒன்பது ரூபாவிற்குச் சாப்பிட்டுவிட்டு மீதி ஒருரூபாவை

வாங்காமல் விட்டுவிட்டு வந்தான். கடைக்காரன் கேட்டான்? ஏன் தம்பி மீதிக்காசு வாங்காமல் போகிறாய் என்று அதற்கு அவன் பரவாயில்லை வைத்துக்கொள் என்று சொன்னான்.

பாடசாலை முடிந்து வீட்டிற்கு வந்தான். வீட்டில் அவன் தாயைக்காணவில்லை. எல்லா இடமும் தேடிக் களைத்து வீடு திரும்பினான். பக்கத்து வீட்டுக் குப்புசாமி சின்னத்தம்பி வீட்டிற்கு ஓடி வந்தான். 'சின்னத்தம்பி சின்னத்தம்பி உன் அம்மா விபத்தில் காயப்பட்டு என் வீட்டில் இருக்கின்றா' என்று சொல்லி அவசரமாக அழைத்துச் சென்றான்.

சின்னத்தம்பி அழ ஆரம்பித்து விட்டான். வைத்தியசாலை குப்புசாமி வீட்டிலிருந்து ஐந்து கிலோமீற்றராவது இருக்கும். வண்டியில் போவதற்குக் குறைந்தது ஐம்பது சதமாவது வேண்டும். ஆனால் சின்னத்தம்பியிடமோ, குப்புசாமியிடமோ ஒரு சதம் கூட இல்லை. நடந்து போவதற்குள் தாய் உயிருடன் இருப்பாள் என்று அவர்களுக்குத் தோன்றவில்லை. என்ன செய்வது என்று அவர்கள் சிந்திக்கையில் அவன் தாய் இறந்து விட்டாள். ஒருரூபா இருந்திருந்தால் அவன் தாய் உயிர் பிழைத்திருப்பாள்.

# திருவள்ளுவர்



உலகப் பொதுமறையாம் திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர். இவர் இந்தியாவில் தமிழ்நாட்டில் இரண்டாம் நூற்றாண்டின் காலப்பகுதியில் வாழ்ந்தார். இவரது மனைவியின் பெயர் வாசுகி அம்மையார். இவர்கள் இருவரும் குடும்பவாழ்வின் ஒற்றுமைக்கு ஓர் இலக்கணம். அறிஞர்களிலே உயர்ந்த அறிவாளி வள்ளுவரே. இவர் இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள மயிலாப்பூர் என்னும் ஊரிலே வாழ்ந்தார். இவரைத் தெய்வப்புலவர் என்றும் கூறுவர்.

எழுத்துக்களுக்கு எல்லாம் முதல் எழுத்தாக "அ" என்று உயிர் எழுத்து இருக்கின்றது. இந்த

உலகத்துக்கு எல்லாம் மேலாக இறைவன் இருக்கிறார் என்ற பொருளுடைய குறளே குறள்களிற்குள் முதற் குறள். இவ்வாறு வள்ளுவர் உயர்ந்த கருத்துடன் திருக்குறளை சிறப்பாகத் தொகுத்துள்ளார். எல்லா நாட்டவர்க்கும், எந்த மொழியினர்க்கும், எல்லா மதத்தினர்க்கும், எந்தக் காலத்திற்கும் பயன்படும் ஒரு புனிதமான நூல் திருவளளுவர் எழுதிய திருக்குறளே.

-கிருஸ்ணயோதி விக்னேஸ்வரன்-
Hiddenhausen


| |
|---|
| மின்னல் குறைந்த பட்சம் 0,1 வினாடி முதல் அதிக பட்சம் 1,6 வினாடி வரை மின்னுகிறது. |

| |
|---|
| ஒரு நிமிடத்தில் 350 சொற்கள் வரையிலும் பிரஞ்சு மொழியில் பேசலாம். |

| |
|---|
| ஒரு சிப்பியில் ஒளி மிக்க முத்து வளர, ஏறக்குறைய 15 வருடங்கள் ஆகும். |

| |
|---|
| விட்டமின் "சி" சத்து எலுமிச்சை, ஓரஞ்சு போன்ற பழங்களில்தான் கூட இருக்கும். |

# நிலாப் பாட்டு





நிலா நிலா வா வா
நில்லாமல் ஓடி வா
மலை மேல் ஏறி வா
மல்லிகைப் பூக் கொண்டு வா
பால் கிண்ணத்தில் சோறு
அள்ளி அப்பன் வாயில்
கொஞ்சிக் கொஞ்சி ஊட்ட வா
குழந்தைக்குச் சிரிப்புக் காட்ட வா

-ஜெயஷாந் மனோறஞ்சிதராஜா-

ஆறுதல் பரிசு

## வஞ்சனை இல்லாக் காகம்

பலகாலத்திற்கு முன் நரியும் காகமும் சினேகிதர்களாக இருந்தன . ஆனால் ஒருநாள் ஒரு வடைக் கதையில் நரி காகத்தை ஏமாற்றி விட்டது. அதற்குப்பின் நரியும் காகமும் பிரிந்து விட்டன. நரிக்கு மிகப் பயமாக இருந்தது ஏனென்றால் தன்னைக் காகம் எப்போதாவது ஒருநாள் பழிக்குப்பழி வாங்கப்போகிறது என்று. ஆனால் காகம் அப்படி ஒருநாள் கூட நினைத்தது இல்லை. அதற்கு, நரியுடன் பழக மிக ஆசை, ஆனால் நரிக்குத்தான் பயம்.

இப்படியே நாட்கள் போக, ஒருநாள் காகம் பாதையில் நடந்து கொண்டிருக்கும் பொழுது ஒரு கரையில் பல கோழிக்குஞ்சுகள் நின்றன. உடனே காகம் பறந்து சென்று நரியைத் தேடியது. ஆனால் நரியைக் காணவில்லை. காகம் ஒரு பாதையில் இருந்து எல்லோரிடமும் நரியைக் கண்டீர்களா? என்று கேட்டது.

காகம் நரியைத் தேடுகின்ற விசயம் எப்படியோ நரிக்குத் தெரிந்து விட்டது. நரிக்கு ஒரே பயமாக இருந்தது.அதுக்கு என்ன



செய்வதென்றே தெரியவில்லை. நரி பாதையில் போய்க்கொண்டிருக்கும் பொழுது காகம் நரியின் கண்ணிற்கு தென்பட்டது. உடனே நரி ஓடுவதற்கு ஆயத்தமாயிற்று. ஆனால் காகம் நரியிடம் ஓடி வந்துவிட்டது.காகம் நரியியிடம் வந்து "அந்த நேர்ப்பாதையில் நிறைய கோழிக்குஞ்சுகள் நிற்கின்றன" என்று கூறியது. உடனே நரிக்கு ஆனந்தமா யிருந்தது. அதே நேரத்தில் சற்று பயமாகவுமிருந்தது.

உடனே நரி காகத்தைப் பார்த்து, "நீ என்னைப் பழிவாங்கப் போகிறாய்" என்று கூறியது. ஆனால் காகம் "அப்படி எனக்கு ஒரு நினைப்பும் இல்லை" என்று கூறியது. ஆனால் நரி நம்புவதாயில்லை, உடனே நரி "நீ சொல்வது உண்மையானால் நான் ஒரு யோசனை வைத்திருக்கிறேன் அதற்கு நீ சம்மாதமா?" என்று கேட்டது. காகமும் சரி என்றது. உடனே நரி காகத்தை ஒரு மரத்திற் கட்டி வைத்தது. பிறகு "நீ கூறுவது சரியென்றால் நான் போய்ப் பார்த்து விட்டு வந்து உன்னை அவிழ்த்து விடுவேன், ______ பிழையென்றால் நீ இரவு முழுவதும் இங்கேயே இருப்பாய்" என்று நரி கூறியது.

இதற்குக் காகமும் ஒப்புக்கொண்டது. நரி புறப்பட்டு விட்டது. வெகுநேரமாகியும் நரி திரும்பி வரவில்லை. ஆனால் காகம் பேசாமல் இருந்தது. அப்பொழுது அந்தவழியால் ஒரு காட்டுப்பூனை பசியுடன் வந்தது. அது கோபத்துடனும் இருந்தது. அது காகத்தைக் கண்டவுடன் பிடித்துச் சாப்பிட்டு விட்டது. நரி திரும்பிக் காகத்தின் இடத்திற்கு உண்மையென்று கூற வந்தது. அத்துடன் அது மன்னிப்புக் கேட்கவும் விரும்பியது. ஆனால் அங்கே காகத்தைக் காணவில்லை. அதற்குப் பதிலாக இரத்தமும் செட்டையும்தான் இருந்தன. நரிக்கு இதைக்

கண்டவுடன் மிகவும் கவலையாக இருந்தது. அது நன்றாக அழுதது. உடனே அது பெரிய ஆற்றில் விழுந்து செத்து விட்டது.

இவ் விடயம் காடெங்கும் பரவியது. எல்லா மிரு கங்களிற்கும் இது ஓர் ஆச்சரியமான விடயம். அன்றிலிருந்து எல்லா மிருகங்களும் அன்பும் ஆதரவும் கொண்டவையாக வாழத்தொடங்கின.

-மேனகா தனபாலசிங்கம்-

ஆறுதல் பரிசு

## நவாலியூரைச் சோமசுந்தரப் புலவர்

எல்லோராலும் தங்கத்தாத்தா என்று சிறப்பாக அழைக்கப்பட்ட சோமசுந்தரப்புலவர் இலங்கையின் மணிமுடி போல் விளங்கும் யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாய்க்கு மேற்கே நவாலியூர் என்னும் கிராமத்தில் ஆயிரத்தி எண்ணூற்றி எண்பதாம் ஆண்டு , ஆனி மாதம் 12ம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் கதிர்காமர். தாயார் பெயர் இலக்குமிப்பிள்ளை. நீண்ட காலமாகவே மக்கட் பேறில்லாத இவர்கள் முருகப்பெருமானை நோக்கித்

தவம் இருந்தனர். இதன் பயனாக சோமசுந்தரப்புலவர் பிறந்தார்.

இவர் மானிப்பாயிலிருந்த அருணாசல உபாத்தியாயரிடம் தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்னர் சிறந்த தமிழ் அறிஞராய் விளங்கிய தந்தையாரிடமும் நவாலியூரிலுள்ள தமது உறவினரான இராமலிங்க உபாத்தியாயரிடம் ஆங்கிலமும், தமிழும் கற்றுப் புலமை எய்தினார்.

இவர் தமது 15வது வயதிலேயே பாடல்களை ஆக்கத் தொடங்கி விட்டார். 15வது வயதில் அட்டகிரி முருகவேள் பதிகம் பாடியபோது பலர் வியந்து அவரைப் பாராட்டினர். தனிப்பாடல்கள் பலவற்றைத் திறமையாகப் பாடும் வன்மை புலவருக்கு இயல்பாகவே அமைந்து கொண்டதனால் இவரை எல்லோரும் "வரகவி" என்று அழைத்தனர். சோமசுந்தரப்புலவர் வட்டுக்கோட்டையில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்து, அங்கே நாற்பது ஆண்டுகள் பணிபுரிந்தார். மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், இதிகாசம் போன்ற பாடங்களைக் கற்பித்தார். இவரிடம் 2000த்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வெளியேறினர். புலவரது நற்பணியாலே தமிழும், சைவமும் வளர்ந்து சிறப்படைந்தன. இவர் தன் குருவாகிய


சுப்பிரமணியசுவாமியின் கட்டளைப்படி தனது மாமன் மகளாகிய சின்னம்மையைத் திருமணம் செய்து இல்லறவாழ்வை இனிது நடாத்தினார். வறுமையும், பிணியும் இவரை வாட்டவே அவற்றைக் கடவுள் வழிபாட்டினால் வெல்ல முடியுமென உணர்ந்து முருகக்கடவுள் மீது பல்லாயிரம் பாடல்கள் பாடினார். இவர் பாடிய பாடல்களைத் தென்னிந்தியாவிலுள்ள பெரும் புலவர்கான அருணாசலக்கவிராயர், மறைமலையடிகள், பாண்டித்துரைத்தேவர் போன்றோர் பாராட்டினர். இதனால் இவரது புகழ் தென்னிந்தியாவிலும் பரவியது.

இவர் எழுதி நடிப்பித்த உயிரிளங்குமரன் என்னும் நாடகத்தின் அருமைகளை அறிந்த இலங்கைத் தமிழ்ப்புலவர்கள் இவருக்குப் புலவர் என்னும் பட்டத்தை அளித்துப் பொன்னாடை போர்த்தி, பொற்கிழியும் வழங்கினர். இலங்கைக் கல்விப் பகுதியினரின் வேண்டுகோளுக்கிணங்க ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி போன்ற பாடல்களைப்பாடிப் பரிசும் முதன்மையும் பெற்றார். அத்துடன் "தங்கத்தாத்தா" என்ற சிறப்புப் பெயரும் உண்டாயிற்று. இவர் தனது தந்தையார் நினைவாக எழுதிய "தந்தையார்பதிற்றுப்பத்து" என்னும்நூல் தமிழர்களுடைய பண்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் எடுத்துக் கூறுகிறது.

இவற்றை விட இவர் எழுதிய "இலங்கைவளம், தாலவிலாசம், நாமகள் புகழ்மாலை, சிறுவர் செந்தமிழ், விநாயகர்பாமாலை, மரதனோட்டம், கதிரைச்சிலேடை வெண்பா, அட்டகிரிக்கலம்பகம், சுகாதாரக்கும்மி, நான்மணிமாலை, நல்லைத்திருப்புகழ், நல்லையந்தாதி," போன்றவை மிகவும் சிறந்தவையாகும். புலவர் ஆசிரியத் தொழிலில் இருந்து இளைப்பாறிய பின்பு தமது இல்லத்தில் சித்தாந்தவகுப்பும்,காவியவகுப்பும் நடாத்தித் தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்தார். இவ்வாறு தமிழ்த்தாய்க்குத் தொண்டு செய்த பெரும் புலவர் தமது எழுபத்திமூன்றாம் வயதிலே அதாவது 1953ம் ஆண்டு ஆடிமாதம் 10ம் திகதி சிவபதமெய்தினார்.

—கிரிசாந் மனோறஞ்சிதராஜா—

Münster



# ஆறுதல் பரிசு

## *சி.வை.தாமோதரம்பிள்ளை*

இவர் 1832ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறுப்பிட்டி என்னும் ஊரிலே பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் வைரவநாதர். தாயார் பெயர் பெருந்தேவி. இவர் வாழ்ந்த காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சி புரிந்தார்கள். எல்லாம் ஆங்கில முறைதான். அதனால் ஆங்கிலக்கல்வியைக் கற்றார். அக்கல்வியைக் கற்றபோதிலும் தமிழ் மீது பற்றுக் கொண்டவராக இருந்தார்.

தமிழை முத்துக்குமாரசாமி கவிராசரிடம் கற்றுப் புலமை பெற்றார். பின்பு சென்னைப் பல்கலைக்கழகம் நடாத்திய பி.ஏ தேர்வில் முதலிடம் பெற்றார். அதன் பின்பு புதுக்கோட்டையில் உயர்நீதிமன்ற நீதிபதியாக விளங்கினார். இவருடைய திறமையையும், பணிகளையும் பாராட்டி "இராவ்பகதூர்" என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. இவர் எங்கள் மதம், மொழி, பண்பாடு, இலக்கியங்கள் அழிந்துபோகாது பாதுகாத்தார். அத்தோடு தமிழ் மக்களையும்

இவற்றைக் காப்பாற்றுமாறு வேண்டினார். சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஏழாலையில் பாடசாலை ஒன்றை நிறுவினார். இவர் தமிழுக்கும், மக்களுக்கும் செய்த தொண்டு மிகச்சிறந்தது. இவரது பெயரும் புகழும் தமிழ் வாழும் வரை வாழ்ந்து கொண்டேயிருக்கும்.

–உமையாள் விக்னேஸ்வரன்–
Hiddenhausen

மற்றவர்களின் வேலைகளில் தேவையில்லாமல் தலையிடாமல் தன்னுடைய கடமைகளை அறிவுடனும் அக்கறையுடனும் செய்கின்றானோ, அவனுக்கு வெற்றி, கௌரவம், செல்வாக்கு தானாகவே தேடிவரும்.

–ஜேம்ஸ் ஆலன்–

தவழுகின்ற குழந்தை எழுந்து நின்று நடக்கும்வரை ஒவ்வொரு நிமிடமும் முயற்சி செய்து கொண்டிருப்பது போல் நாமும் வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால் முயற்சியிலிருந்து பின்வாங்கக் கூடாது.

–ரொபேட் அன்ரனி–

## தொப்பி வியாபாரியும் குரங்குகளும்



ஒரு ஊரில் ஒரு தொப்பி வியாபாரி இருந்தான். அவன் ஊரூராகச் சென்று தொப்பிகளை விற்று வந்தான். ஒரு முறை தூரத்தில் இருக்கும் ஊருக்குப் பயணம் செய்தான். வெய்யில் அதிகமான நாட்கள் என்றபடியால் சரியான வெப்பமாக இருந்தது. அவன் அதிக தூரம் செல்ல முடியாமல் களைப்படைந்தான். சிறிது தூரத்தில் பெரிய மரம் ஒன்று நிற்பதைக் கண்டான். மரத்தின் கீழ் இளைப்பாறலாம் என எண்ணி மரத்தை நோக்கி நடக்கலானான். மரத்தை அடைந்தவுடன் தொப்பி மூட்டையை இறக்கி வைத்துவிட்டு இளைப்பாறினான். சிறிது நேரத்தின் பின் தன்னையறியாமல் கண்ணயர்ந்துவிட்டான்.

அந்தப் பெரிய மரத்தில் பல குரங்குகள் இருந்தன. தொப்பி வியாபாரி உறங்குவதைக் கண்ட குரங்குகள் கீழேயிறங்கித் தொப்பி மூட்டையை அவிழ்த்துத் தொப்பிகளை எல்லாம் எடுத்துத் தங்கள் தலைகளின் மேல் போட்டுக்

கொண்டு மரத்தின் மேல் ஏறிவிட்டன. தொப்பி வியாபாரியும் நித்திரை விட்டு எழுந்து பார்த்தான். தொப்பி மூட்டை அவிழ்ந்து கிடந்தது. தொப்பிகளைக் காணவில்லை. என்ன செய்வதென்று புரியாமல் அக்கம் பக்கம் பார்த்தான். ஒன்றையும் காணவில்லை. மரத்தின் மேல் குரங்குகளின் சத்தம் கேட்கவே மரத்தை அண்ணாந்து பார்த்தான். குரங்குகள் தொப்பிகளைப் போட்டிருப்பதைக் கண்டான். இந்தத் தொப்பிகளை எப்படிப் பெறுவதெனச் சிறிது நேரம் யோசித்தான்.

உடனே கீழே கிடந்த கல் ஒன்றை எடுத்துக் குரங்குகளுக்கு எறிந்தான். குரங்குகள் செய்வதைத் திருப்பிச் செய்யும் தன்மையுடையவை. வியாபாரி கல்லை எறிந்தவுடன் தாங்களும் தங்கள் தலையில் இருந்த தொப்பிகளைக் கழற்றி எறிந்தன. வியாபாரி தொப்பிகளைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்ந்தான்.



## . ~அப்பா தந்த பந்து~ .



அப்பா தந்த பந்து
அழகு மிக்க பந்து
உருண்டையான பந்து
உருண்டு ஓடும் பந்து
தட்ட ஓடும் பந்து
தாவிக் குதிக்கும் பந்து

வித்தியா
சிவசுப்பிரமணியம்
**Selm**

சிறுவர் அமுதம் சந்தாதாரர்கள், ஆக்கதாரர்கள், வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருப்பவர்கள் எல்லோருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். வீடு மாற்றம் காரணமாக, சஞ்சிகை காலதாமதமாகி விட்டது.

சிறுவர் அமுதத்தின் புதிய விலாசத்தை இங்கு தருகிறோம்.


**"SIRUVAR AMUTHAM"**
**ALEF STR-11**
**50189 ELSDORF**
**GERMANY.**

# ஔவையார்



ஔவையார் மிகுந்த களைப்போடு ஒரு வீட்டின் வாசலில் நின்றார். அவரை அந்த வீட்டின் தலைவி அன்போடு வரவேற்றாள். பாட்டி, வாருங்கள். எங்கே போய் வருகிறீர்கள்? என்று கேட்டாள்.

ஔவையோ அவளைப் பார்த்துப் "பெண்ணே, இந்த ஊருக்கு வந்தால் தன் வீட்டிற்கு விருந்துண்ண வரவேண்டும் என்று

வாதவர்கோன் என்பவன் சொன்னான். வத்தவர்கோன் என்னும் செல்வன் ஒருவனும் என்னை வரும்படி அழைத்திருந்தான். இவர்கள் இருவர்களின் வேண்டுகோளை விடவும் யாதவர்கோனின் அழைப்புத் தான் எனக்கு விருப்பமாக இருக்கிறது. ஏனென்றால் அவன் நேராகவே என்னிடம் உணவு தரமுடியாது என்று சொல்லி விட்டான், என்று பசிக் களைப்போடு கூறினார்.

ஔவையின் பசி அறிந்த அந்த வீட்டின் தலைவி அவரது பசிக்கு உணவு கொடுத்தாள். அவளை வாழ்த்தி விட்டு ஔவையார் தன் பயணத்தைத் தொடர்ந்தார். ஔவையார் உணவுக்குக் கூடக் கஷ்டப் பட்டும் தமிழ் வளரப் பாடுபட்டார்.

ஔவையார் புல்வேளூர் என்னும் ஊரை அடைந்தார். அங்கு பூதன் என்பவரின் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். வெளியே இருந்து வந்த பூதன் அவரை வணங்கினார். "நீங்கள் வந்த வேளை என் வயலுக்குக் கிணற்று நீர் கிடைத்தது. என் வீட்டில் உணவுண்டு செல்ல வேண்டும்" என்று பணிந்தார். ஔவையும் அவரது அன்புக்குக் கட்டுப் பட்டார். அங்கு உணவருந்திய ஔவையார் பூதனை வாழ்த்திப் பாடினார்.

அந்தப் பாடல் இது:

வரகரிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரவென்றே புளித்த மோரும்- பரிவுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ் புரிந்து இட்ட சோறு
எல்லா உலகும் பெறும்

(தொடரும்)

கோஸியக்கோ என்னும் மலை அவுஸ்ரேலியாவில் உள்ளது. அங்குள்ள உயரமான மலை இதுதான். உலகின் உயர்ந்தமலையான எவரெஸ்ட் மலையின் காற்பங்கு உயரமே இதன் உயரமாகும்.

பாலூட்டிகளுக்கும் பறவைகளுக்கும் இரண்டு விஷயங்களில் ஒற்றுமையுண்டு. முதலாவது சூடான இரத்தத்தை இவை பெற்றுள்ளன. இரண்டாவது முதுகெலும்புகளையும் பெற்றுள்ளன.

முதன்முதல் பெற்றோலில் ஓடிய பெருமை பென்ஸ் கார்களுக்கே உரியது.

ஹிட்லர் ஜேர்மனி நாட்டின் சர்வாதிகாரி என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவர் எங்கு பிறந்தவர் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஜேர்மனியின் அயல் நாடான ஆஸ்த்திரியாவில் தான்.

# சார்லி சாப்ளின்



மகிழ்ச்சிக் கடலில் திளைத்தவாறே புகைவண்டியில் பிரயாணம் செய்த சார்லி சிக்காகோ நகர நிலையத்தில் வேறு புகைவண்டியில் மாறி ஏறவேண்டி ஏற்பட்டது. அங்கு இறங்கிய சார்லியை ஆயிரக் கணக்கான இரசிகர்கள் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்தனர். அவரை தூக்கிச் சுமந்து கொண்டு (Black Stone) "பிளாக் ஸ்ரோன்" என்ற நட்சத்திர ஓட்டலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மாபெரும் வரவேற்பும் சார்லிக்குக் கிடைத்தது.

எதிர்பாராத வரவேற்பில் திணறினார் சார்லி. அதே வேளையில் நியூயோர்க் நகரக் காவலதிகாரியிடம் இருந்து தந்தியொன்றும் சார்லியின் பெயருக்கு வந்திருந்தது. அதில் "நியூயோர்க்கில் சார்லியின் இரசிகர்கள் கூட்டம்

போக்குவரத்துக்களைத் தடை செய்கிறதென்றும், போக்குவரத்தைச் சீர்செய்வதற்கு உதவியாகச் சார்லியை இடையேயுள்ள 125ம் இலக்கத் தெருவில் இறங்குவது நல்லது' என்றும் வேண்டுகோள் விடுக்கப் பட்டிருந்தது.

நகரகாவலரின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்துச் சார்லி 126ம் இலக்கத் தெருவிலேயே இறங்கிக் கொண்டார். அங்கு காத்து நின்றிருந்த சிட்னி, அன்புத்தம்பியை ஆரத்தழுவிக் கொண்டார். சார்லியை தனது காரிலேயே ஏற்றிக் கொண்ட சிட்னி சார்லியோடு உரையாடிக் கொண்டு வந்தார். "நியூயோர்க் நகரத்தில் சனக்கூட்டம் நிரம்பி வழிகிறது. நீ, லாஸ்ஏஞ்சலில் இருந்து வரும் செய்தியைப் பத்திரிகைகள் முன்பே எழுதத் தொடங்கி விட்டன, என்று சிட்னி தம்பியிடம் சில பத்திரிகைகளைக் கொடுத்தார்.

பத்திரிகைகளை விரித்துப் பார்த்தார் சார்லி. "நியூயோர்க்கில் சார்லி" இதோ, சார்லி வந்து விட்டார். இரசிகர்களின் அன்புத் தொல்லையிலிருந்து விடுபடுவதற்காக நகரத்தில் எங்கோ ஒளிந்திருக்கிறார் சார்லி. இவ்வாறு பலவிதமாகப் பத்திரிகைகள் செய்திகளைப் பிரசுரம் செய்திருந்தன.

-தொடரும்-

# முல்லா



முல்லாவுக்குச் சில நாட்களாக ஞாபக மறதி கூடி விட்டது. எப்போதும் வெளியே செல்லும் போது கதவை இறுக்கிப் பூட்டும் அவர், சில காலமாக தான் வெளியே செல்லும்போது நன்றாகக் கதவைத் திறந்தும், தான் உள்ளே இருக்கும்போதும் பூட்டி விடுவார்.

இதை முல்லாவின் எதிரி ஒருவர் கண்டார். ஊர்மக்கள் நிறைந்த இடத்தில் முல்லாவிடம் இதுபற்றிக் கேட்டு, முல்லா வெட்கத்துடன் தனக்கு

ஞாபகமறதி என்று சொல்ல வேண்டும். அதைக்கேட்டு ஊர்மக்கள் சிரிக்க வேண்டும் என நினைத்தார். அதன்படியே ஒருமுறை ஊர்மக்கள் நிறைந்த இடத்தில் "ஏன் முல்லா நீங்கள் சில நாட்களாக உங்கள் வீட்டுக் கதவை வெளியே செல்லும்போது பூட்டுவது இல்லை? உள்ளே இருக்கும்போது பூட்டுகிறீர்கள்?" என வினவினார்.

எதிரியின் எண்ணம் முல்லாவுக்கு விளங்கியது. உடனே "சில காலமாகத்தான் எனக்கு நான்தான் எனது வீட்டின் விலைமதிப்புள்ள பொருள் என்பது தெரிந்தது, அதுதான் இப்படி" என்றார் எதிரியிடம்.


நம்பிக்கையும், நேர்மையும் ஒருவரிடம் இருப்பது மிகவும் உயர்ந்ததாகும். இப்படிப் பட்டவர்கள் எங்கே சென்றாலும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

-கௌதமபுத்தர்-

சோம்பலை உதறுங்கள். எழுந்து ஓடுங்கள். நல்ல வாய்ப்புக்களை நீங்கள் தான் தேடிப் போக வேண்டும்.

-டேல் டவுண்டன்-

## சூரியன்



வட்டமான சூரியன்—வந்து
எட்டிப் பார்க்குது
சிட்டுக்குருவிக் கூட்டமெல்லாம்
சிறகடித்துப் பறக்குது

மெல்ல மெல்லக் காற்று—வந்து
என்னுடலைத் தழுவுது
சிரிக்கும் சின்னப் பூக்களெல்லாம்
சிந்தைதனை மயக்குது

விழித்து விட்ட மக்களெல்லாம்
விரைந்து வேலை செய்கிறார்
அந்திவேளை வந்து விட்டால்
அகன்று விடும் பகலுமே

—அமுதினி—

# கைவீசு



கை வீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
பட்சணம் வாங்கலாம் கைவீசு
பரிந்து புசிக்கலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
பாடித் தின்னலாம் கைவீசு
சட்டை வாங்கலாம் கைவீசு
தரித்துக் கொள்ளலாம் கைவீசு
கோவிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு
தேரைப் பார்க்கலாம் கைவீசு
திரும்பி வரலாம் கைவீசு



ஈழம்
எங்கள்
நாடென்போம்
இதற்கு
ஏது
ஈடென்போம்

-சின்ன இராஜேஸ்வரன்-

புதிய முகவரி

SIRUVAR AMUTHAM
ALEF STR. 11
50189 ELSDORF
GERMANY
TEL. :02271/66527
KONTO NR. : 1146023746
BLZ 37050299